### தி.மு.க.வைப் பற்றி மக்களிடம் பொய்யைப் பரப்பிய – முதல்வர் ஜோசப் விஜய்

# இன்றைக்கு தி.மு.க.வால் தமிழ்நாடு அடைந்த மாற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்!

## திண்டிவனத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் பொதுக்கூட்டத்தில் சே.மெ.மதிவதனி பேச்சு!



திண்டிவனம், ஜூன். 15–

திண்டிவனத்தில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாள் திராவிடர் எழுச்சி நாள் விழா பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான், திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் சே.மெ. மதிவதனி ஆகியோர் சிறப்புரை யாற்றினார்.

சுயமரியாதைக்காரர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழாவை திராவிட கழகத்தின் சார்பில் திராவிட எழுச்சி நாள்விழா பொதுக்கூட்டம். விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வண்டி மேடு அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திண்டிவனம் மாவட்ட தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார். திண்டிவனம் மாவட்டச் செயலாளர் இளம் பருதிஅனைவரையும் வரவேற்றார்.திராவிடர் கழக நிர்வாகிகள் பரந்தாமன், ராதா, நவா.ஏழுமலை, அன்புக்கரசன், பெருமாள், துரை .திருநாவுக்கரசு, விஜயலட்சுமி, வில்லவன் கோதை, பச்சையப்பன், பன்னீர்செல்வம், ரமேஷ், தேவராஜ், ஓவியர் செந்தில், கோபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் திராவிடர் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதனி கலந்துகொண்டு பேசுகையில்:

கலைஞருடைய பிறந்தநாள். கலைஞரின் பிறந்தநாளில் ஒருவர் உண்மையைப் பேசியிருக்கிறார். வரலாற்றில் முதல் முறையாக நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் ஒரு செய்தியைப் பேசியிருக்கிறார்.

### தமிழ்நாடு முதலிடம் என சொன்னது யாரு?

“இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகத் திகழும் தமிழ்நாடு, பெண்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றத்தில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்களானது சமூக வளர்ச்சி மற்றும் சமூக பொருளாதார மாற்றத்திற்கான வலிமையான கருவிகளாகத் திகழ்கின்றன. இந்தியாவில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 42% பெண்கள் தமிழ்நாட்டில்தான் உள்ளனர். நிதிப் பொறுப்புணர்வு, சமூக முன்னேற்றம் மற்றும் மக்கள் தொகை கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்பட்ட மாநிலங்கள் எந்த வகையிலும் பாதிக்கக் கூடாது.

சொன்னது யாரு? இன்றைக்கு எந்த தி.மு.க. ‘தீய சக்தி, தீயசக்தி’ என்று பொய்யைப் பரப்பினீர்களோ, அந்த தி.மு.க.வால் தமிழ்நாடு அடைந்த மாற்றத்தை முதல்வர் ஒப்புக்கொண்டுள்ளார்.

திராவிட இயக்கம் என்ற பேரியக்கத்தினுடைய உழைப்பால் தமிழ்நாடு அடைந்த மாற்றம் இது. இதைச் சொன்னா, சில பேர் கேட்பாங்க, “ஓ, செஞ்சிட்டு சொல்லிக் காட்டுறீங்களா? சொல்லாமல் விட்டா,” எங்களுக்கு என்ன செஞ்சீங்க? இப்ப நாங்க பதில் சொல்லணுமா வேண்டாமா?” எங்களுக்கு என்ன செஞ்ச? என்ற கேள்வி வர்றப்ப, ”என்ன செஞ்சோம் என்று சொன்னா, சொல்லிக் காட்டுறதா ஒரு வேளை இருந்துச்சுன்னா, தாழ்மையோடு சொல்லிக் காட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஏன் கேட்டா, நீங்கள் தோற்கடித்திருப்பது யாரை என்பதை, திரும்பத் திரும்ப நான் சொன்ன அஞ்சு லைனை நியூஸ்ல இன்னைக்கு எல்லாம் வருது போய் பாருங்கநிலையான நீடித்த வளர்ச்சியைத் தந்தவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற முதலமைச்சர்!

அண்ணன் வன்னியரசு அவர்களை வெற்றி பெறச் செய்த மண் திண்டிவனம்!

அந்த மகிழ்ச்சியோடே நான் பேசுகிறேன். இங்கே இருக்கக்கூடிய அண்ணன் செஞ்சி மஸ்தான் அவர்கள், அவர் ஒரு உரையில பேசுறாரு, எல்லாருக்கும் அந்த வீடியோ வந்துச்சு, உண்மையாகவே பார்த்து நெகிழ்ச்சி அடைந்தோம். ”என் தொகுதி வெற்றி பெறுவதை விட திண்டிவனம் பகுதியில் வன்னியரசு அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும், அதற்காக கழகத் தொண்டர்கள் உழைக்கணும் என்று சொன்னவர்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்கள் .

இன்றைக்கு முத்தமிழறிஞர் கலைஞருடைய பிறந்தநாளை ஏன் கொண்டாடுகிறோம்? ”உங்களுக்கு என்னங்க, எதுக்குங்க திமுககாரங்க கொண்டாடுறீங்க?ன்னா, கலைஞருக்கும் திமுகவுக்குமான தொடர்பு எப்படியோ, கலைஞருக்கும் பேரறிஞர் அண்ணாவுக்குமான தொடர்பு எப்படியோ, கலைஞருக்கும் தந்தை பெரியாருக்குமான தொடர்பு எப்படியோ, அப்படித்தான் மான வாழ்வு வாழக்கூடிய எங்களைப் போன்ற இளைஞர்களுக்கும் முத்தமிழறிஞர் கலைஞருக்குமான தொடர்பபு ஆகும்.

### அதுதான் சார் எங்களுக்கு புரட்சி!

காவல்துறையில பெண் பிள்ளைகளை காவலர்களாக சேர்க்க 1931ல் தீர்மானம் போட்டவர் தந்தை பெரியார், அந்த தலைவரை இந்த சமூகம் கோமாளியாக தானே பார்த்திருக்கும்?அப்படி பெரியார் தீர்மானம் போட்டப்ப கலைஞருக்கு வயசு ஆறு, அந்த குழந்தையாக இருந்த கலைஞர் தான், 1973ல் முதலமைச்சராகி தமிழ்நாட்டில் பெண்களை காவல்துறையில் நியமித்த தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அதுதான் சார் எங்களுக்கு புரட்சி!

பெண்களை எல்லாம் அறிவு கண்களாக பார்த்தவர் தந்தை பெரியாரும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரும், இந்த இயக்கமும்! பெண்ணுரிமையும் கல்வியும் எங்களை யார் சார் படிக்க சொன்னா? ”படிக்காத என்று சொல்லிச்சு ஊரு. 8, 10, 12, ஆம் வகுப்பு, கல்லூரிபடிச்சா பெண்களுக்கு திருமண உதவித்தொகை என்று சொன்னவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்.மேலும் ஒரு படி மேலே போய் சொல்ல வேண்டும் என்றுசொன்னால் பெண்களுக்கு சொத்தில் சம உரிமையை பெற்றுக் கொடுத்தவர் கலைஞர்.

கலைஞர் யார் தெரியுமா? பொதுவாக படம் ரிலீஸ் ஆகுதுன்னா நடிகர் பேரை போட்டுத்தான் படம் ரிலீஸ் ஆகும். சினிமா வரலாற்றில் வசன கர்த்தாவின் பெயரைப் போட்டுப் படத்தை ப்ரமோட் பண்ணது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருக்குத் தான், தமிழால் கலைஞர் வாழ்கிறார், கலைஞரால் தமிழ் வாழ்ந்தது. ரொம்ப அர்த்தத்தோடு நான் சொல்லுகிறேன், தமிழால் கலைஞர் வாழ்ந்தார், கலைஞரால் தமிழ் வாழ்கிறது. நாடி நரம்பு புடைக்க... இந்த தேர்தல்ல அலையடிச்சுச்சுன்றாங்க, என்னென்னமோ அடிச்சுச்சுன்றாங்க. அடிச்ச அலையில காணாமல் போன ஒரே பீஸ், பெரியாரை விமர்சித்த பீஸுகள்தான்.

நீ பெரியாரை எதிர்த்து கூட தமிழ்நாட்டுல அரசியல் பண்ணலாம், பெரியாரை அவதூறு பேசி ஒரு பயலும் தமிழ்நாட்டில் அரசியல் செய்ய முடியாது என்பதை இந்த தேர்தல் காட்டியது.

ஆனால், நீங்கள் செய்யக்கூடிய ஒரு ஒரு காரியத்திற்கும் அதற்கு நேர் எதிரான விளைவுகளை சந்திப்பீர்கள்.

பிரதமர் மோடி மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்து, பிரதமர் நேருவை விட அதிக நாட்கள் ஆண்டுட்டாராம்பிரதமர் மோடி , 3 வருஷம் இல்லை, 30 வருஷம் இந்தியாவை ஆண்டாலும், சீரழிவுக்கான முகம் பிரதமர் மோடி! இந்தியாவின் வீழ்ச்சிக்கான முகம் பிரதமர் மோடி! இந்தியாவின் பொருளாதாரத்தை நாசப்படுத்தியதற்கான முகம் பிரதமர் மோடி! இங்க இஸ்லாமிய சகோதரர்கள் வந்திருக்கீங்க, தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியாவில், இந்திய சுதந்திர போராட்டத்துல உரிமை எடுத்து, இந்தியா சுதந்திரம் அடைந்ததுக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய இஸ்லாமிய மக்கள் தான் கொண்டாட முடியும். அவ்வளவு தியாகம் செய்திருக்கிறார்கள். அதற்கு, அந்த மக்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்ற நினைத்தவர் பிரதமர் மோடி.

யாராவது ஒன்றிய அரசு பணியிடத்துல பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் எல்லாம் இடஒதுக்கீடு காலத்தை நிரப்பி BC, OBCன்னு ஃபில் பண்ணிட்டு போய் உட்காருறீங்கன்னு வச்சுக்கோங்க, நீங்கள் வரலாற்றில் நன்றி சொல்ல வேண்டியது, இந்தியாவில் தமிழ்நாட்டில் இருந்த திராவிடர் கழகத்துக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும்!

போராட்டம் பண்ணாங்க, ஆர்ப்பாட்டம் பண்ணாங்க. கலைஞர் ஆட்சி போனாலும் பரவாயில்லைன்னு ஆர்ப்பாட்டம் பண்ணாரு, போராட்டம் பண்ணாரு. வி.பி.சிங் தான் தமிழ்நாட்டில் அல்ல, இந்திய ஒன்றியத்தில் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 27% இடஒதுக்கீடைத் தந்தவர், சமூக நீதி காவலர் வி.பி.சிங்.

அந்த பிரதமர் வி.பி.சிங், ஆட்சி கவிழ்க்கப்பட்டப்ப சொன்னாருஎன் கால்கள் உடைக்கப்பட்டிருக்கலாம், ஆனால் நான் எட்ட வேண்டிய இலக்கை எட்டிவிட்டேன். இனிமேல் என் கால் உடைபட்டால் கவலை இல்லைஎன்றார். அவர்களெல்லாம் வாழ்ந்த இந்திய ஒன்றியத்தில் நாடாளுமன்றத்துல தான் பிரதமர் மோடி இருக்கார். எப்படி கலைஞர் வாழ்ந்த சட்டமன்றத்தில் இன்னைக்கு யார் யாரோ இருக்காங்களோ, அந்த மாதிரி வி.பி.சிங் இருந்த நாடாளுமன்றத்தில் இன்னைக்கு பிரதமர் மோடி இருக்கார்.

### இது பெருமையா?

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகணும்னு போராட்டத்தை அறிவிக்கிறார். ஒருத்தர் சொல்றாரு, ”அய்யா நாங்க ஆட்சியில இருக்கப்ப நீங்க ஆர்ப்பாட்டம் பண்ணி போராட்டம் பண்ணலாமா? நான் செய்றேன் ஐயா. சொல்கிறார், அதற்குள் பெரியார் மறைந்து விடுகிறார். கலைஞர் சொல்லுகிறார், ”பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றாமலேயே அவரை அடக்கம் செய்துவிட்டோம்.

பெரியார் மறைந்த பிறகு கலைஞர் எழுதுகிறார், சொல்றார் ஆட்சியாளர்கள்ட்ட, பெரியாருக்கு அரசு மரியாதை கொடுக்கணும். ”அவர் எந்த சட்டமன்ற உறுப்பினரா இருந்தாரு?ன்னு இழுக்கிறாங்க ஆட்சியாளர்கள். அப்போது கலைஞர், ”மகாத்மா காந்தி எந்த அரசுப் பொறுப்புல இருந்தாரு?ன்னு கேட்கிறார். ”இல்லை, நீங்கள் பெரியாருக்கு அரசு மரியாதை கொடுத்தால் மத்திய அரசினுடைய கோபத்திற்கு ஆளாக நேரிடும். கலைஞர் கேட்கிறார், ”நேரிட்டால்? ”ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கலைஞர் சொன்னார், ”என் தலைவர் பெரியாருக்காக இந்த ஆட்சி பறிபோகும்னா அதை விட பெரிய மரியாதை எனக்கு என்ன?ன்னு கேட்டார். கலைஞர் அமர்ந்த சட்டமன்றம் அது. ஜாதிய இழிவை சுமந்தே இருந்த தோள்கள் எல்லாம் இன்றைக்கு நெஞ்சை நிமிர்த்தி, ”அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சொன்ன கலைஞர் அமர்ந்த சட்டமன்றம் அது.

ஆரிய பார்ப்பனர்களை கை வச்சிட்டீங்கன்னா உங்களை அழிக்காம விடக்கூடாதுன்னு கங்கணம் கட்டுற குரூப் அது. கலைஞர் எல்லாம் வருஷத்துக்கும் அவங்க வந்து எதிர்ப்பைத் தெரிவிச்சாங்க. நீங்க ஏதோ ஆரிய எதிர்ப்புன்றது கோமாளித்தனம்னு நினைச்சுக்கிட்டு இருக்கீங்க. ஆரிய எதிர்ப்பு எவ்வளவு பெருசு தெரியுமா? நம்ம 97% மக்கள் இருக்கோம் ஓபிசி, எஸ்சி, எஸ்டி. எத்தனை பேர் ஒன்றிய அரசினுடைய பணியிடங்கள்ல இருக்கோம்? கணக்கு சொல்லுங்க. 3% இருக்கிற பார்ப்பனர்கள் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். அவங்க லாபி அவ்வளவு பெருசு. ”ஜாதியே பார்க்கலையாம், மறைமலைநகர் பார்ப்பனரை ஸ்ரீரங்கத்துல கொண்டு போய் நிறுத்தி ஜெயிக்க வைக்கிறவங்க ஜாதியே பார்க்கலை. கிறிஸ்தவர்கள் அதிகம் நிரம்பியிருக்கக் கூடிய தொகுதியில நிக்கிற முதலமைச்சர் ஜாதியே பார்க்கலை

### பெரியாரை கற்றுக் கொள்ளங்கள்!

ஒன்னு சூப்பர் பவர் இருக்கணும் இல்ல ஒன்னும் இல்லாத பவர் இருக்கணும். கற்றுக் கொள்ளுங்கள், கற்றுத் தருவதற்கு எப்போதும் இந்த இயக்கம் தயாராக இருக்கிறது. பெரியாரைக் கற்றுக் கொள்ளுங்கள், அண்ணாவைக் கற்றுக் கொள்ளுங்கள், கலைஞரைக் கற்றுக் கொள்ளுங்கள், எப்படி உழைப்பது என்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினைப் பார்த்து கற்றுக் கொள்ளுங்கள்.

”நடந்தது நடந்து போச்சு ஆகிற வேலையைப் பாருங்கன்னு கடந்து போக முடியாது. பேராபத்து தமிழ் நாட்டை சூழ்ந்து வருகிறது. 10 வருடத்திற்கு மேல் ஆட்சியில் பிரதமர் மோடி இருந்து விட்டார், ஆர்.எஸ்.எஸ். இனுடைய ஆக்டோபஸ் கரங்கள் எல்லா வகையிலும் வருகிறது. அப்படி வர்றப்ப, பெரும் பதவியில் இருந்த போதே ஆள முடியாத தமிழ்நாட்டை எப்போதும் ஆள முடியாது என்ற அச்சத்தில் பிஜேபி பல பிராடக்டை விற்பனைக்குக் கொண்டு வரக்கூடிய நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கரங்கள் முன்பை விட பலம் மிகுந்ததாக மாற வேண்டும் என்பதற்காகத்தான் ‘திராவிடர் எழுச்சி நாள்’. ஒருபோதும் சோர்ந்து விழுவதற்கான இயக்கம் அல்ல இது. வெற்றி தோல்வியைத் தாண்டி சமூக நீதி, சுயமரியாதை, சமத்துவம், பகுத்தறிவை பேசுவதற்கான இயக்கம் இந்த கருப்பு சிவப்பு கொடி தாங்கிய திராவிடர் இயக்கம் என்பதைச் சொல்வதற்காகத்தான் திராவிடர் எழுச்சி நாள். கலைஞர் வாழ்கிறார் என்று சொன்னால், சமத்துவம் வாழ்கிறது என்று அர்த்தம். கலைஞர் வாழ்கிறார் என்றால், சுயமரியாதை வாழ்கிறது என்று அர்த்தம் .சமூக நீதிக்காகப் பேசுகின்ற வரை, இந்த இயக்கத்தினுடைய பணிகள் தொடரும் தொடரும். கருப்பு சிவப்பு கரை வேட்டியோடு களம் காணுங்கள், தாய்க்கழகமான திராவிடர் கழகம் உங்களோடு நிற்கிறது. திராவிடர் எழுச்சி நாள் வாழ்த்துக்கள், வாழ்க பெரியார், வளர்க கலைஞர் என திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் சே.மெ.மதிவதனி பேசினார்.

கூட்டத்தில் தோழமைக் கட்சி நிர்வாகிகள்சுப்ரமணியன், சௌரிராஜன், மலைச்சாமி, பாபு கோவிந்தராஜ், திமுக நிர்வாகிகள்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி,ஒன்றிய செயலாளர்கள் ராஜாராம் , பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், பொதுக்குழ உறுப்பினர் க திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர்கண்ணன்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.டி.பாபு, நகர மன்ற உறுப்பினர் பாஸ்கர், கோவிந்தராஜ்,திண்டிவனம் நகர திராவிடர் கழக பொறுப்பாளர்கள் பாலசுந்தரம், விநாயகமூர்த்தி, பாவேந்தன், ராஜாராம் ,அருள், கன்னியப்பன் ,செந்தில் வேலன், அன்பரசன் ,கௌரிஸ்ரீதர், குமார், சாந்தி பெருமாள், விஜயலட்சுமி, லட்சுமி பாவேந்தன், நிவேதா, தேன்மொழி, கஸ்தூரி, அமலா ரமேஷ் உள்ளிட்டோர். கலந்துகொண்டனர். மாநில இளைஞரணி துணை செயலாளர் தம்பி பிரபாகரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 103 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம், ஒண்டிபுதூர் பகுதி, 56ஆவ வட்ட கழக பொறுப்பாளர் சதிஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் கழக தோழர்கள் மற்றும் பாக முகவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் பகுதி கழக பொறுப்பாளர் கஸ்தூரி அருண், பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், அவைத் தலைவர் என்.டி.சின்னசாமி, 57வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாந்தாமணி, ஆர்.கே.கே.மணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் மாணவர் சங்கம் ஏற்பாட்டில் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான 10 – 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி பயிலுவதற்கு ஊக்கத் தொகையினை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் பேரூர் கழக செயலாளர்கள் டி.வி.குமார், பொறியாளர் தண்டபாணி, கவுன்சிலர் தியாகு, செயலாளர்கள் சேகர், நாகராஜ், சஞ்சய், சிவக்குமார் உள்பட பள்ளி முன்னாள் மாணவர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை ‘தூய்மை அருணை’ சார்பில்

# மாதந்தோறும் கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

## சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் பரிசுப் பெட்டகங்கள் வழங்குகிறார்!

திருவண்ணாமலை, ஜூன் 15 -

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பு சார்பில், தூய்மைப்பணி மரம் நடுதல், நீர்நிலை பராமரித்தலோடும், மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடத்தப்பட்டுவருகிறது. ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் அவர்கள் பரிசு பெட்டகங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்களை அமைப் பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

அதனை தொடர்ந்து மாதந்தோறும் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழாவை கடந்த 2025 ஜூலை மாதம் முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

நாளை (16.06.2026 - செவ்வாய்கிழமை) காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெறவுள்ளது.

விழாவிற்கு அருணை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் குணசிங் தலைமை வகிக்கிறார்.

அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சி.இ.ஒ. பேராசிரியர் அசோக் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தூய்மை அருணை மேற்பார்வையாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

விழாவில் கலந்து கொண்டு ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்ப ண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கி வாழ்த்திப் பேசுகிறார்.

நிறைவாக தூய்மை அருணை மேற்பார்வையாளர் பிரியா ப.விஜயரங்கன் நன்றி கூறுகிறார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ. வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, இல.குணசேகரன் ஆகியோர் செய்து வருகின்றனர்.



கோவை தி.மு.கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் சி.எம். இராஜேந்திரன் தாயார் திருமதி விஜயாமணி அவர்கள் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், நகர கழக செயலாளர் குட்டி (எ) ஆ.சுதாகர் நேரில் சென்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். இதில் மாநில நெசவாளர் அணி செயலாளர் கே.எம்.நாகராஜ், பொள்ளாச்சி தெற்கு நகர செயலாளர் அமுதபாரதி, ஒன்றிய செயலாளர்கள் கணேசன், தொண்டாமுத்தூர் கிழக்கு, நந்தகுமார், மதுக்கரை மேற்கு, பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஆர். கண்ணன்
### ஜூன் 15 (1976)



தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகம் தோன்றியபோது வாழ்நாள் உறுப்பினராக பதிவு செய்து கொண்டு கழகத்தின்மீது நீங்காப் பற்றும், தனியாத ஆர்வமும் கொண்டு கொள்கை உறுதியோடு கழகப் பணி ஆற்றி வந்தார்.

1959ல் முதன்முதலாக கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சியின் அப்போதை 27வது வட்ட மன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியதோடு; 1967, 1971 ஆகிய இரண்டு முறை சென்னை, ‘பேசின்பிரிட்ஜ்’ சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

“நெஞ்சுரமிக்க தளபதி ஒருவரை சென்னை மாவட்டக் கழகம் இழந்துவிட்டது. அந்தோ! புயலையும் புன்னகையுடன் எதிர்த்து நிற்கும் ஆருயிர் உடன்பிறப்பையல்லவா நான் இழந்துவிட்டேன்” என ‘என் நெஞ்சில் நீயிருப்பாய், கண்ணா!’ என்ற கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**